ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2262/33 - 2022 ජනවාරි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.13

*2262/33 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு ஹபுகஸ்தலாவ நீர் வழங்கல் திட்டத்தின், ஹபுகஸ்தலாவ நீர் சேகரிப்புத் தாங்கி மற்றும் பம்பிக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டு ஒன்று தேவைப் பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல. DVP/ *02/01/*KY/*289*
*நீர் வழங்கல் அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
இலக்கம் *35*, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
*2022, சனவரி 11.*


*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின், நுவரெலியா மாவட்டத்தில், கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 461 C, ஹல்கொல்ல கிராம அலுவலர் பிரிவில், ஹல்கொல்ல இலக்கம் 01 கிராமத்திலமைந்த, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் எஸ். எம். அபேரத்ன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட, இலக்கம் 2773/A இற்கு உரிய வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 01 இனால் குறிப்பிடப்படும் "ஹல்கொல்ல வத்த" எனும் காணியில் கீழ் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 40 பேர்ச் விஸ்தீரணமான காணித்துண்டு.*

காணித்துண்டு இலக்கம் : 01
காணியின் பெயர் : ஹல்கொல்ல வத்த
விஸ்தீரணம் : 40 பேர்ச்

காணியின் எல்லைகள் :

வடக்கு : ஆ. வ. க. 1275 இற்கு உரிய வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 434 மற்றும் 428;
கிழக்கு : ஆ. வ. க. 1275 இற்கு உரிய வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 428, 437 மற்றும் காணித்துண்டு இலக்கம் 436 இன் எஞ்சிய பகுதி;
தெற்கு : ஆ. வ. க. 1275 இற்கு உரிய வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 436 இன் எஞ்சிய பகுதி மற்றும் காணித்துண்டு இலக்கம் 435;
மேற்கு : ஆ. வ. க. 1275 இற்கு உரிய வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 435 மற்றும் 434.

காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் :

1. திரு. பீ. எம். ஏ. ஜே. பஸ்நாயக,
இலக்கம் 49,
ஹபுகஸ்தலாவ,
ஹல்கொல்ல இலக்கம் 01.

2. திரு. பீ. எம். எஸ். கே. பஸ்நாயக,
இலக்கம் 49,
ஹபுகஸ்தலாவ,
ஹல்கொல்ல இலக்கம் 01.

EOG 1 - 0133

---

## 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, தெமோதர நீர் வழங்கல் செயற்திட்டத்தை நீடிக்கும் செயற்திட்டத்தின் கீழ் எல்ல நீர் சேகரிப்புத் தாங்கியை மற்றும் நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினுடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
நீர் வழங்கல் அமைச்சர்.

தொடர்பு இல. DVP/ 02/03/BD/396
நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2022, சனவரி 11.

**அட்டவணை**

*பதுளை மாவட்டத்தில், எல்ல பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 68B, எல்ல கிராம அலுவலர் பிரிவில், எல்ல கிராமத்தில் அமைந்துள்ள, உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. கோதாபய வனசிங்ஹ அவர்களினால் 2021.08.26 ஆம் திகதி வரையப்பட்ட 0380 இலக்க திட்டப்படத்தின் துண்டு இலக்கம் 1 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிவ்பர்க் வத்த, பிரிவு இலக்கம் SB1 என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து சுமார் 0.0324 ஹெக்டயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

*காணியின் எல்லைகள் :*

*வடக்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி;*
*கிழக்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி;*
*தெற்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி;*
*மேற்கு : தோட்ட வீதி.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : 01. ஹபுகஸ்தென்ன பெருந்தோட்ட நிறுவனம்*

EOG *1 - 0134*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.